Literacy for a Billion

Movie: Anandapurathu Veedu
Year: 2010

Song: Chithirai Vaanam
Lyricist: Vairamuthu

சித்திர வானம்
ஹோ சிநேகித காற்று
பச்சையின் ஆட்சி
ஹோ பட்சியின் பாட்டு
வயிற்றுக்கு சோறு தேடும்
நகரத்து வாழ்க்கை
உயிருக்கு சோறு போடும்
கிராமத்து வாழ்க்கை
இங்கேயே வாழ்வு சாவு
ரெண்டும் வேண்டுமே
சித்திர வானம்
ஹோ சிநேகித காற்று
பச்சையின் ஆட்சி
ஹோ பட்சியின் பாட்டு

ஓ தானாக யோசிக்கவில்லை
இதுவரை
தண்ணீரில் எரியும் தீபம்
தாமரை
வாசம் புது வாசம்
முளைவிடும் பூவிடம்
கூடிடும் மண்வாசம்
ஓசை இளம் ஓசை
கொடிவிடும் அரும்புகள்
ஊடே வரும் மெல்லோசை
அழகின் பேராட்சி
இதைவிடவா கண்காட்சி
இங்கே வாழ்க்கை பரவசம்
ஆஹா வானம் இலவசம்
காற்று நம்மை
கேட்டு கேட்டு வீசும்
ஆ...

இல்லை ஒரு தொல்லை
ஆயுளை கிள்ளிடும்
அவசரம் இங்கில்லை
கொள்ளை சுகம் கொள்ளை

சிலகணம் மனிதனின்
மவுனம்போல் இசை இல்லை
பணமே வாழ்வென்று
பகரவாய் தேய்கின்றோம்
எங்கே தேவை குறையுதோ
அங்கேதான் கை நிறையுதே
தேவை தீர்ந்த நாளை
தேட கண்ணே ஆ...
சித்திர வானம்
ஹோ சிநேகித காற்று
பச்சையின் ஆட்சி
ஹோ பட்சியின் பாட்டு
வயிற்றுக்கு சோறு தேடும்
நகரத்து வாழ்க்கை
உயிருக்கு சோறு போடும்
கிராமத்து வாழ்க்கை
இங்கேயே வாழ்வு சாவு
ரெண்டும் வேண்டுமே
சித்திர வானம்
ஹோ சிநேகித காற்று
பச்சையின் ஆட்சி
ஹோ பட்சியின் பாட்டு

Disclaimer: PlanetRead does not own these lyrics and is not using them for any commercial purpose. For over 20 years, PlanetRead has been subtitling Bollywood songs for mass literacy. These lyrics are being offered as part of PlanetRead's literacy development initiative.

PlanetRead is a tax-exempt, not-for-profit: 501(c) (3) in the United States and 80(G) in India.